<u>சுருக்கம்</u>

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – விழுப்புரம் மாவட்டம் – செஞ்சி பேரூராட்சிக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் – ரூ.14,637 கோடி செலவினத்தில் செயல்படுத்த அதிகாரமளிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது – நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ 2) துறை

அரசாணை (நிலை) எண்.105 நாள்.01.08.2007

<u>படிக்க:</u>

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.கோ.செஞ்சி /இநிபொ6/திமேபி/2007 நாள்.31.7.2007.

-------

<u>ஆணை:</u>

விழுப்புரம் மாவட்டத்திலுள்ள செஞ்சி பேரூராட்சிக்கு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று ரூ.14.637 கோடி செலவில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், இத்திட்டத்தினை குறைந்தபட்ச தேவை திட்டத்தின் கீழ் 80 விழுக்காடு மானியம் (ரூ.11.710 கோடி) 20 விழுக்காடு பேரூராட்சி / பொதுமக்கள் பங்களிப்பு (ரூ.2.927 கோடி) ஆகியவை மூலம் மொத்தம் ரூ.14.637 கோடி செலவில் வாரியத்தால் நிறைவேற்றப்படும் என்றும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் படிக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் செஞ்சி பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்ட அமைப்புச் செலவு ரூ.14.637 கோடி எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.21.69 இலட்சம் எனவும், தனி நபர் திட்டச் செலவு ரூ.6048 மற்றும் 1000 லிட்டர் குடிநீர் உற்பத்திச் செலவு ரூ.24.20 எனவும், இத்திட்டத்தினை குறைந்தபட்ச தேவை திட்ட நிதியிலிருந்து 80 விழுக்காடு மான்யம் மூலமும், 20 விழுக்காடு பேரூராட்சி / பொதுமக்கள் பங்களிப்பாகவும் மொத்தம் ரூ.14.637 கோடி செலவில் நிறைவேற்ற இத்திட்டத்தை அரசுக்கு பரிந்துரை செய்யவும் வாரியம் தனது தீர்மானம் எண்.231, நாள்.31.7.2007 –இல் தீர்மானித்துள்ளது என்றும், அதன்படி 31.7.2007 அன்று அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது என்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்கள் கூறியுள்ளார்.

2. 31.7.2007 அன்று சுற்றனுப்பல் மூலம் அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவின் தீர்மானம் எண். 1ல் குழு, இத்திட்டத்திற்கு இசைவு அளித்து, அரசின் நிர்வாக ஒப்புதல் பெற பரிந்துரை செய்துள்ளது. அதனடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் மேற்கண்ட திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து விழுப்புரம் மாவட்டம், செஞ்சி பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான அமைப்புச் செலவு ரூ.14.637 கோடி எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.21.69 இலட்சம் எனவும், தனிநபர் திட்டச் செலவு ரூ.6048 மற்றும் 1000 லிட்டர் குடிநீர் உற்பத்திச் செலவு ரூ.24.20 எனவும், இத்திட்டத்தினை குறைந்தபட்ச தேவை திட்ட நிதியிலிருந்து 80 விழுக்காடு மான்யம் மூலமும் மீதம் 20 விழுக்காடு பேரூராட்சி / பொதுமக்கள் பங்களிப்பு மூலமும் மொத்தம் ரூ.14.637 கோடி செலவில் நிறைவேற்ற நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு செயலாளர்.

பெறுநர்

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை 600 005.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை 600 108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை 600 018.
மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் மாவட்டம்.
செயல் அலுவலர், செஞ்சி பேரூராட்சி, விழுப்புரம் மாவட்டம்
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை 600 009.
நிதி (ந.நி(ம்) கு.வ) துறை, சென்னை 600 009.
பொது (நூலகம்) துறை, சென்னை 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1, குவ 3, குவ 4 மற்றும் வசெ) துறை,
சென்னை 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.